புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol: 08, Issue : Special
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
SACRED HEART RESEARCH PUBLICATIONS
March 2025
ISSN: 2456-821X

# 27. TML1166 - இலக்கியங்களில் மனைமாட்சி

முனைவர் ம.வித்யா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை, தூய நெஞ்சக்கல்லூரி,
திருப்பத்தூர்.

## முன்னுரை

*இல்லத்தினை அறம் நிறைந்ததாக மாற்றுவது இல்லத்தலைவியின் கையில் தான் அமைந்துள்ளது. வாழும் காலம் முழுவதும் எண்ணற்ற உறவுகளை மனிதன் சந்தித்தாலும் இல்லாள் என்னும் உறவு மற்ற உறவுகளைக் காட்டிலும் மேன்மை பொருந்தியது என்பதை மறுக்கஇயலாது. அதனால் தான் நீதிவெண்பா மனைவிபோயின் எல்லாம்போம் என்று சிறப்பிக்கிறது போலும். இல்லத்தில் இருந்து இல்லத்தை உடலாலும், இல்லத்து உறவுகளை மனதாலும் பேணிக்காப்பவள் பெண். குடும்பநலம் சிதையாமல் வேராக இருந்து பல்வேறு தியாகங்களைச் செய்து வாழ்பவள் பெண். அத்தகைய மனையாளின் மாட்சியை இலக்கியங்களின் வழி எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## சங்க இலக்கியத்தில் மனைமாட்சி

*மனையில் இருக்கும் தலைவி விருந்தோம்பல், மக்கட்பேறு, குடும்பச் சிக்கல்களில் உடன் இருத்தல் உள்ளிட்ட பல்வேறு பண்புகளில் தலைச்சிறந்தப் பங்கினை ஆற்றியத் தகவல்கள் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இல்லறக் கதவினை இரவு அடைப்பதற்கு முன்பு, விருந்தினர் யாரேனும் உளரோ என உறுதி செய்த பின்னரே தாழிடும் வழக்கத்தினைக் குறுந்தொகை கூறுகிறது.*

“பலர் புகு வாயில் அடைப்பக் கடவுநர்
வருவீர் உளீரோ ” – (குறுந் 118)

*மேலும் தானியம் ஏதும் இல்லாத நிலையிலும் விதைக்காக வைத்திருந்த தினையைக் குத்தியெடுத்து விருந்தினருக்கு உணவளித்த தலைவியின் விருந்தோம்பல் பண்பு வியப்பில் ஆழ்த்துகிறது .( புறம் 333)*

## மக்கட்பேறு

*இல்லறத்தின் மிக முக்கிய அறமாக மக்கட்பேறு கருதப்படுகிறது. தலைவிக்குப் பூப்பு நிகழ்ந்த காலத்து ஈராறு நாளும் அவளை அகலக் கூடாது என தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துள்ளது. என்பதிலிருந்து மக்கட்பேற்றின் அவசியம் புலப்படுகிறது. மக்கட்பேறு இருவரின் அறமாகக் கருதப்படினும் மக்களைப் பேணும் பெரும் பொறுப்பு மனைவியாலே ஆற்றப்படுகிறது.*

“பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்
விரி கதிர்ப் பொற்கலத்து ஒரு கை ஏந்தி
கொண்ட கொழுநன் குடிவறன் உற்றென
கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்
பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே ” ( நற்றிணை – 110)

*என்னும் இப்பாடல் மக்கட்பேற்றின் சிறப்பையும், தலைவியின் இல்லற நெறியையும் ஒருசேர உணர்த்துவதாகும். பிறந்த வீட்டில் தேன் கலந்த பாலை வேண்டாம் என மறுத்து ஓடிய சிறிய பெண் திருமணம் ஆனபின்பு தனது கணவனின் வீட்டில் வறுமை என அறிந்தும் தந்தை அனுப்பிய செல்வம் ஏற்காமல், பொழுது மறுத்து உண்ணும் அறிவும், ஒழுக்கமும் எங்குக் கற்றாள் செவிலி வியக்கிறாள். தலைவியின் இத்தகைய மனைமாட்சித் திறன் யாராலும் கற்பிக்கப்படுவதில்லை இயல்பிலேயே பெண்ணுக்கு இப்பண்பு உண்டு என்பதற்கு இப்பாடல் சான்று பகர்கிறது.*

*மற்றுமொரு ஐங்குறுநூற்றுப் பாடலில் , தான் ஈன்றக் கன்றை இடையில் கிடத்தி மான்இணைகள் படுத்திருப்பது போல தலைவனும், தலைவியும் உறங்குகிறார்கள் என்னும் செய்தி இடம்பெற்றுள்ளது. (ஐங்குறுநூறு .401) . இன்றும் கூட இல்லாளின் படுக்கைஅறையில் குழந்தையை எவ்வாறு கிடத்தி உறங்குகிறார்கள் என்பதை நாம் காணும் போது சங்க கால தொடர்ச்சி நம்மைப் பின்தொடர்வதை உணர முடிகிறது.*

**இல்லற நெறி**

*தலைவன் மீது கொண்ட காதலால் குறைகளையும் நிறையாக்கிக் காணும் பண்பினைத் தலைவி கொண்டிருந்தாள் என்பதைக் காணும் போது, அன்பு மிகுந்த இடத்தில் குறை கண்ணுக்குத் தெரிவதில்லை என்னும் உயரியப்பண்பினைச் சங்க இலக்கியத்தலைவி பெற்றிருப்பது பெருமைக்கு உரியதாக இருக்கிறது.*

''தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு
உவலை கூவல் கீழ
மான் உண்டு எஞ்சிய கழிலி நீரே'' – ( ஐங்குறுநூறு – 203)

*தலைவனின் தேசத்தில் இருக்கும் மான் குடித்தது போக எஞ்சிய நீரும் சுவைதரும் . இச்சுவைநீர் நம் தேசத்து தேன் கலந்த பாலினும் சுவை மிக்கது என தலைவி கூறுவது தலைவன் மீது அவள் கொண்ட மாறாத அன்பினைக் காட்டுகிறது. புறநானூற்றின் பசிராந்தையார் பாடிய பாடல் ஒன்றில் ஆண்டு பலவாகியும் நீவிர் நரை திரை இல்லாமல் வாழக் காரணம் என்ன அவர் கூறிய முதற்காரணம்,*

''யாண்டு பலவாக நரையில வாகுதல்
மாண்ட வென் மனைவியொடு மக்களும் நிரம்பினர் '' – (புறம் – 191)

*சிறப்புப்பொருந்திய மனைவியும், அறிவிலும் , பண்பிலும் சிறந்த மக்களைப்பெற்றதே என்று கூறுகிறார். ஆக ஒருவரின் வாழ்க்கை வளமாக அமைய தலையாயத் தேவையாகக் கருதப்படுவது நற்பண்புகளை கொண்ட மனைவி அமைவதே என்பதை அறிய முடிகிறது.*

**நீதிஇலக்கியங்களில் மனைமாட்சி**

*நீதி இலக்கியங்களில் மனையாளின் மாட்சி குறித்து எண்ணற்றப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஒரு குடத்து நீரைக் காய்ச்சி உண்ணும் வறுமை வந்தாலும் கடல்நீரையே கொடுத்தாலும் போதாது என சுற்றத்தார் வந்தபோதும், அவர்முகம் கோணாதவாறு நடந்து கொள்ளும் பெண் மாட்சிஉடையவள் ஆவாள் . என்னும் கருத்தை நாலடியார் கூறுகிறது.*

''குடநீர் அட்டு உண்ணும் இடுக்கண் பொழுதும்
கடல்நீர் அற உண்ணும் கேளிர் வரினும் '' – (நாலடியார் 39)

*மங்கலம் என்ப மனைமாட்சி என வள்ளுவரும், இல்வாழ்க்கையின் மங்கலமாக மனைவியைக் கருதுகிறார். திரிகடுகம் மனைவியின் கடமைகளைக் கூறுகிறது.*

''நல்விருந்து ஓம்பலின் நட்டாளாம் வைகலும்
இல் புறஞ் செய்தலின், ஈன்ற தாய் தொல் குடியின் '' ( திரிகடுகம் 64)

*விருந்தினரை உபசரிப்பதில் நட்பாகவும், இல்லறநெறி தவறாமல் நடத்தலில் தாயாகவும், நல்ல குழந்தைகளைப் பெறுவதில் சிறந்த மனைவியாகவும் திகழ்வதே மனைவியின் கடமையாகும் என திரிகடுகம் கூறுகிறது.*

**விருந்தோம்பல்**

''மோப்பக் குழையும் அனிச்சம் முகம் திரிந்து
நோக்கக் குழையும் விருந்து'' – (குறள் 90)

*வீட்டாரின் முகம் சற்று வாடினாலும் விருந்தினர் முகம் வாடும் ஆகவே புன்முறுவலோடு அவர்களோடு உரையாடி, உணவளித்து, உபசரிக்க வேண்டும் என திருக்குறள் உரைக்கிறது. மக்கட்பேற்றினைப் பற்றிக் கூறும் நான்மணிக்கடிகை ஈன்றாளின் எண்ணக் கடவுளும் இல் எனச் சிறப்பிக்கிறது. (நான்மணிக்கடிகை.54)*

**பக்தி இலக்கியங்களில் மனைமாட்சி**

*காரைக்கால் அம்மையாரின் வரலாற்றை அறியும்போது தனது கணவன் பரம தத்தனின் ஆசையை நிறைவேற்ற மற்றுமொரு மாம்பழத்தை இறைவனிடம் வேண்ட இறைவனும் அளிக்கிறார். பரமதத்தமனின் கண்முன்னே மற்றுமொரு மாம்பழத்தினை புனிதவதி கொணரை அவரை விலக்கி மறுமணம் புரிந்து கொள்கிறான் பரமதத்தன். தனது கணவனுக்கான அழகை வெறுத்து ஒதுக்கி பேயுருவம் வேண்டுகிறார் அம்மையார். இவரது கதையில் மனைவியின் அனைத்துக் கடமைகளையும் ஆற்றுவதற்காக எந்த*

*எல்லைக்கும் செல்ல தயாராக இருக்கிறார். விருந்தோம்பல் என்னும் மனையறத்திற்காக அவர்செய்த செயல் இங்கு குறிப்பிடத்தக்கது.*

**காப்பியங்களில் மனைமாட்சி**

*சிலப்பதிகாரத்தில் , ஒரு இல்லாளின் கடமையாக விருந்தோம்பல் கருதப்பட்டது என்னும் செய்தி கண்ணகியின் வாயிலாகப் புலப்படுகிறது. கணவனை விட்டு பிரிந்து இருப்பதால் , விருந்தினரை எதிர் கொள்ள முடியாத நிலையில் இருப்பதாக கண்ணகி வருந்துவதை சிலம்பு பதிவு செய்கிறது.*

“தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை ” – (சிலப்பதிகாரம் 6. 72, 73)

*அதேபோல் மனைவியானவள் கணவனின் இன்பம், துன்பம் என எல்லா தருணங்களிலும் உடன் இருப்பாள் என்றும் அதே சமயத்தில் அவன் செய்யு ம் தவறுகளை இடித்துரைக்கும் பணியும் அவளுக்கு உண்டு என்பதையும் சிலம்பு கூறுகிறது.*

“வாயல் முறுவற்கவர் உள்ளகம் வருந்தப்
போற்றா வொழுக்கம் புரிந்தீர் ” ( சிலம்பு 6 , 83)

*கோவலனின் செயலால் வருத்துமுறும் அவனது பெற்றோர்களின் ஆறுதலுக்காக பொய்யாக புன்முறுவல் அளிக்கும் நிலையை தனக்கு ஏற்படுத்தி விட்டான் எனவும் கோவலனிடம் அவனது தவறை இடித்துரைக்கிறாள் கண்ணகி.*

**புராணங்களில் மனைமாட்சி**

*கம்பராமாயணத்தில் சீதையின் கற்புத்திறன் யாவரும் அறிந்தது. இராமன் இருக்கும் இடமே சீதைக்கு அயோத்தி என இராமனுடனே காட்டிற்குச் சென்ற போதும், அவனைப் பிரிந்த போது அசோக வனத்தில் இருந்தபோதும் ,*

“எல்லை நீத்த உலகங்கள் யாவும் என்
சொல்லினால் சுடுவேன் , அது தூயவன்
வில்லின் ஆற்றற்கு மாசு என்று வீசினேன்.” – (கம்ப ராமாயணம் , சூடாமணிப் படலம் )

*கம்பராமாயணத்தில் சீதை இராமன் மீது கொண்ட அளவு கடந்த அன்பும், காதலும், மாறாத நம்பிக்கையும் இல்லாளின் தலைச்சிறந்த பண்புகளாகக் கொண்டாடத்தக்கவை.*

*மகாபாரதத்தில் , காந்தாரி கணவன் காணாத உலகினை தான் காண விரும்பாது கண்பார்வை இழப்பதும், தனது நூறு பிள்ளைகளின் வாழ்வுக்காக அனுதினமும் போராடுபவளாகவும் இருக்கிறாள். தீயச்செயல் புரிபவனாக இருப்பினும் தனது தவவலிமை அனைத்தையும் தனது மகன் துரியோதனனுக்கு தரத்துணிந்தவள் காந்தாரி. வாழ்நாள் முழுவதும், தனது தமையன், கணவன், பிள்ளைகள் என மற்றவர்களின் நலனுக்காகவும், வாழ்வுக்காகவும் போராடும் தாயுள்ளத்தை கொண்டிருக்கும் காந்தாரியின் பாத்திரப் படைப்பு போற்றுதலுக்குரியது.*

**இக்கால இலக்கியங்களில் மனைமாட்சி**

*பாரதியின் கவிதைகளில் பெண்ணின் மனைமாட்சி குறித்த அறிவு பல இடங்களில் ஒளிவிடுகின்றது.*

“காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச்செய்து வாழ்வமடி – (பெண்கள் விடுதலைக் கும்மி)

*கற்பு என்னும் சொல் இருகட்சிக்கும் பொதுவானது என்று முதன்முதலில் கூக்குரலிட்டப் பெருமை பாரதியைச் சாரும் .*

*பாரதிதாசனின் குடும்பவிளக்கு என்னும் படைப்பு பாரதியின் கவிதைக்கு அடுத்ததாக குறிப்பிடத்தக்க நூலாகும். ஒருநாள் நிகழ்ச்சி, விருந்தோம்பல், மக்கட்பேறு, திருமணம், முதியோர் காதல் என ஐந்து பாகங்களாக இல்லாளின் சிறப்பினை எடுத்துரைக்கிறார் பாரதிதாசன்.*

“கேட்டும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சும் அன்பால்
ஊட்டுதல் வேண்டும் தாய்போல் ” – (குடும்பவிளக்கு ப. 29)

**திருவிக வின் பெண்ணின் பெருமையில்**

*மனைவி வெறும் கலவிக்கு மட்டும் உரிய ஒருத்தியல்லள். அவள் தாயுமாவாள் , உடன்*

*பிறந்தவளுமாவாள் .மகளுமாவாள், கடவுளுமாவாள் எல்லா இயல்புகளும் அவளிடத்தில் உண்டு. இவையெல்லாம் சேர்ந்த ஒருத்தியே மனையில் வாழத்தக்கவள். ( பெண்ணின் பெருமை ப. 230) என்று கூறுவதிலிருந்து பெண் குறித்த உயரிய பிம்பத்தை திருவிக உருவாக்குகிறார்.*

**நவீன காலங்களில் மனைமாட்சி**

*நவீன காலங்களில் பெண்ணியம் குறித்து மிகப்பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. குடும்பம், அரசியல், பொருளாதாரம் என அனைத்துத் தளங்களிலும் பல்வேறு சிக்கல்களைப் பெண்கள் சந்தித்துக் கொண்டு வருகிறார்கள் . இருப்பினும் 80 சதவிகித பெண்கள் குடும்பத்தின் நல்வாழ்வுக்கு ஆணிவேராக வாழ்ந்து வருவதும் மறுக்க இயலாத உண்மை. பொருளாதாரத்தில் பெண்கள் பங்கேற்க ஆரம்பித்தது முதல் பெண்ணின் சுமையும் கூடுதலானது உண்மை. ஆயினும் பெண்ணின் மாட்சிமைத்திறன் வளர்ந்து தான் வருகிறது. ஆகவே பெண்ணின் ஆற்றல் அறிந்து பெண்மை போற்றுவோம்.*

**முடிவுரை**

*தாய்வழிச் சமூகத்தின் தோற்றத்தில் இனக்குழுவினை வழிநடத்திய தலைமைத்துவம் பெற்ற பெண்ணாக இருந்தாலும், பத்தினி என பெயர்பெற்று கணவனுக்காக எதை வேண்டுமானாலும் செய்யலாம் என போராடிய பெண்ணாக இருந்தாலும், ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானம் என் பல்வேறு பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பெண்ணாக இருந்தாலும், ஆட்சி செய்தாலும், அடிமை யானாலும் எவ்வாறு இருந்தாலும் பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா என்ற பாரதியின் வரியையே இக்கட்டுரை முடிவாக ஏற்கிறது. பெண்மை எந்நான்றும் போற்றுதலுக்குரியது என்பதை இக்கட்டுரை மெய்ப்பிக்கிறது.*

**சான்றாதாரம்**


1. சங்க இலக்கியம் , நியு சென்சுரி புத்தக நிலையம், சென்னை
2. சிலப்பதிகாரம், திருமகள் நிலையம், சென்னை, 2005.
3. கம்பராமாயணம், திருமகள் நிலையம், சென்னை, 1998
4. குடும்ப விளக்கு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993
5. பெண்ணின் பெருமை, திருவிக, பூம்புகார் பதிப்பகம், சென்னை, 1959